# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 301/2025** |
| Prosecution witness | : | P.W. 4 |
| List of Witness | : | L.W. 11 |
| Name | : | **கோபிநாத்** |
| Father's /Husband Name | : | **பரமசிவம்** |
| Village | : | **நவல்பட்டு காவல்நிலையம்** |
| Taluk | : | **திருவெறும்பூர்** |
| Age | : | 50 |
| Occupation | : | **உதவி ஆய்வாளர்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 21st day of May 2026. Both accused present.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள நவல்பட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2023 ம் ஆண்டு குடவாசல் காவல் நிலையத்தில் நான் பணிபுரிந்த போது என்னுடன் எனக்கு முன்னால் பணிபுரிந்த இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும் முதல்கட்ட விசாரணை செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி தற்போது வேறு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருவதாலும், இவ்வழக்கில் நான் உடனிருந்த வகையிலும் விசாரணை அதிகாரி என்ற வகையிலும் மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் நீதியின் நலன் கருதி காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு நான் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 11.08.2023 ம் தேதியன்று குடவாசல் காவல் நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்க பெற்ற தகவலைப் பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த லெட்சுமணன் மகன் மருதுபாண்டி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து காவல் நிலைய மனு எண். 409/2023 ஆக மனு விசாரிக்கப்பட்டு மனு விசாரணைக்கு பின் கடந்த 15.08.2023 ம் தேதி அன்று காவல் நிலைய குற்ற எண்.403/2023 இதச சட்டப்பிரிவுகள் 294(b), 324,506(2) ன் கீழ் எதிரிகளின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 08.30 மணியளவில் சம்பவ இடமான சீதக்கமங்களம் காளியம்மன் கோவில் அருகே சென்று சாட்சிகள் சிவரஞ்சனி மற்றும் முத்து ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகசர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் இவ்வழக்கில் சம்பவம் உண்மை என்று தெரிய வர எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் சீதக்கமங்களம் காளியம்மன் கோவில் அருகே நின்று கொண்டிருந்தவர்களை அன்றைய தினமே 13.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் சிறப்புஉதவிஆய்வாளர் பணிமாறுதலில் சென்றுவிட்ட படியால் இவ்வழக்கு கோப்பினை காவல் நிலைய வசத்திலேயே வைத்துள்ளார்.

பின்னர் இவ்வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்த போது மேற்படி சிறப்புஉதவிஆய்வாளரிடம் கூறிய அதே சங்கதிகளை என்னிடம் கூறியதால் நான் எவ்வித மறு வாக்குமூலமும் பெறவில்லை.

பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட மருதுபாண்டி மற்றும் உதயகுமார் ஆகியோர்களுக்கு விபத்து பதிவேடு பதிவு செய்தும் மற்றும் முதல் உதவி சிகிச்சை அளித்த திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு. சிவராமன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேட்டினை பெற்று தாக்கல் செய்துள்ளார்.

மேலும் காயம்பட்ட மருதுபாண்டி என்பவர்க்கு சிகிச்சை அளித்த திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு. அருள்பிரசாத் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்றினை பெற்று தாக்கல் செய்துள்ளார். மேலும் காயம்பட்ட உதயகுமார் என்பவர்க்கு சிகிச்சை அளித்த திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு. நடராஜசேதுபதி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்றினை பெற்று தாக்கல் செய்துள்ளார். மேற்படி காயம்பட்ட இரண்டு நபர்களுக்கும் ஏற்பட்ட காயமானது சொற்பகாயம் என்று மேற்படி மருத்துவர்கள் கருத்துரை வழங்கியுள்ளார்கள்.

மேலும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகளின் செய்கையானது இதச சட்டப்பிரிவுகள்294(b), 324, 506(2) ன் கீழ் தண்டித்தக்க குற்றமென கடந்த 16.10.2023 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

அ.சா.1 கொடுத்த தவறான புகாரை புலன் விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடத்திற்கு செல்லாமல் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தை காவல் நிலையத்தில்

வைத்து தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 ஐ எதிரிகள் திட்டவும் இல்லை தாக்கவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.21 20:25:04 +0530

District Munsif cum
Judicial Magistrate,
Kodavasal.

`